**தலைப்பு 272 – குருணாகல் மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

குருணாகல் மாவட்ட செயலகத்தின் 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குருணாகலை மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

குருநாகலை மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் 2020 டிசெம்பர் 31 இல் உள்வாறான குருநாகலை மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குகேற்ப (இ.க.நி) ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு பொருட்டு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானதாகவும் உசிதமானதாகவும் இருந்தன. என்று நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத்

தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிலானவற்றுடன் இணங்குமாறு தயாரிக்கப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் மேற்கொண்ட பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தன.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்களும் திணைக்களங்களும் வழங்கிய நிதி பயன்படுத்தப்படல்.

இது சம்பந்தமாகப் புலனாகிய கணக்காய்வு அவதானிப்புக்கள் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முறையே 09 அமைச்சுக்களிலிருந்தும் 02 திணைக்களங்களிலிருந்தும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியிலிருந்து 14 செலவின விடயங்களினும் 03 செலவின விடயங்களினதும் நிதி பயன்படுத்தப்படாதிருந்ததுடன் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 8,872,101 நிதியில் முறையே 75 முதல் 100 சதவீதத்தைப் பிரதிநித்திதுவப்படுத்துவதாகவும் இருந்தது. | ஒன்பது அமைச்சுக்களதும் 02 திணைக்களங்களதும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி இல்லாது போனமை, திட்டமிடப்பட்டவாறு நிகழ்ச்சிதிட்டங்கள் நடைபெறாது இரத்துச் செய்யப்பட்டமை. கொரோனா நோய் காரணமாக நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மக்களை அணிதரட்ட முடியாது போனமை காரணமாகின. | (i) ஏனைய அமைச்சுக்களதும் திணைக்களங்களதும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை கால தாமதம் இன்றி பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.<br>(ii) பெறப்பட்ட நிதியை இயன்றளவு பயன்படுத்த முயல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பத்து அமைச்சுகளும் 04 திணைக்களங்களும் ஏற்பாடு செய்த நிதியில் முறையே 21 மற்றும் 05 செலவின விடயங்களில் ரூபா 6,685,970 பயன்படுத்தப்படாதிருந்தது. அது – திகதியில் 50 முதல் 75 சதவீதம் வரையிலமைந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் 08 அமைச்சுக்கள் மற்றும் 03 திணைக்களங்கள் என்பவற்றுடன் 01 ஆணைக்குழுவும் வரம்புக்கு அதிகமாக 24 செலவின விடயங்களில் ரூபா 4,559,787 ஐ செலவழித்திருந்தன. அது 100 முதல் 157 சதவீதமானதாகும். | குறித்த அமைச்சுக்களதும் திணைக்களங்களதும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பெறுமதிப் தாமதம் ஏற்பட்டது. ஆகவே, அதிகளவு செலவு ஏற்பட்டுள்ளது. செலவு மீள நிரப்பபட்டுள்ளது. இவை அவசியமான செலவினங்களாகும். | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை செலவினங்கள் விஞ்சக்கூடாது. |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை.**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
| **(அ) வர்த்தமானி அறிவித்தல்** | | | |
| 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | குருநாகலை பிரதேச செயலகப் பிரிவில் அரசாங்க காணி ஒன்றின் கருங்கற்களுக்கான குத்தகை 2015 முதல் 8087 கியூப்களுக்குரிய கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | குத்தகை நிலுவை ஆகிய ரூபா 65,000 2021 மே 06 ஆந் திகதி அறவிடப்பட்டுள்ளது. தகவல் கிடைக்கப் பெற்றதும் 2020 ஆம் ஆண்டின் மொத்த நிலுவை அறவிடப்படும். | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| | 2002 யூன் 19 ஆந் திகதிய 2002/01 ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவைகள் சுற்றறிக்கை | ஒரே இடத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்படப் பணிபுரிபவர்கள் இட மாற்றம் செய்யப்பட வேண்டும். எனினும், ஒரே இடத்தில் 05 முதல் 19 ஆண்டுகளாகப் பணி புரியும் 3132 உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றம் இல்லாதிருந்தனர். | இடமாற்றம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளின் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் ஏனையோர் எதிர் காலத்தில் இட மாற்றம் செய்யப்படுவர். | பொது நிர்வாகச் சுற்றறிக்கைப் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019 டிசெம்பர் 06 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கை. | குருநாகல் பிரதேச செயலகம் 2020 ஆம் ஆண்டில் சசிரிகம பிரஜாபாதக கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சிக்கும் திட்டத்தின் கீழ் 05 துறைகளில் 147 செயற்திட்டங்களை இனங்கண்டிருந்தது. எனினும், ஆண்டில் செலவாகிய ரூபா 103,414,716 தொகையில் 94 சதவீதமான ரூபா 97,308,263 வீதி நிர்மாணிப்பதற்கு மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டம் இனங் காணப்பட்ட போது 09 துறைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்ட போதும் கிராமிய குழுவின் இணக்கத்துக்கு ஏற்ப தேவைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு நடைபெற்றது. | தேவையான 09 துறைகளையும் உள்ளடக்கிய செயற்திட்டங்களை தெரிவு செய்ய வேண்டும். |

### 2.3 மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவானிக்கப்பட்ட மோசடித் தன்மை வாய்ந்த கொடுக்கல் வாங்கல்களின் விபரம் கீழே காணப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிராமிய அடிப்படை வசதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் குருநாகலை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையிலான மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 611.13 மில்லியன் | i. அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டும்.<br>ii. பொருட் | வடமேல் மாகாண தலைமைச் செயலாளர் பதில் வழங்காதால் இவ் வேளையில் இதற்கு பதில் வழங்க முடியாதுள்ளது. |

ஆகும். இதன் மூலம் 09 வீதி அபிவிருத்தி வேலைகளை வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் நேரடித் தொழிலாளர்களைப் பயன்படுத்தி மேற்கொண்டிருந்தது. இது தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

i. போட்டியுடனான பொருட் கொள்வனவுக்கு அப்பால் நேரடித் தொழிலாளரைப் பயன்படுத்தி இச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டமை இற்கு முறையான அங்கீகாரம் இருக்கவில்லை.

ii. நேரடித் தொழிலாளருடன் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள் திணைக்களத்திடம் இருக்கவில்லை. அவ்வாறிருக்க அத் திணைக்களத்திற்கு இச் செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்தது.

iii. இவ் வீதிச் செயற்திட்டத்திற்கான பொருட்களும் இயந்திரங்களும் பெறப்பட்டமை வெளிப்படையாக அமையாதிருந்தது. போட்டி வரம்புக்குட்பட்டதாகவும் பொருட் கொள்வனவுக்கான முறையான அதிகாரம் இல்லாதிருந்தும் என்பன உள்ளடங்கிய அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டி மற்றும் வடமேல் மாகாண 419 ஆம் நிதிப் பிரமாணம் என்பன புறக்கணிக்கப்பட்டிருந்தன.

கொள்வனவு சட்டங்கள், விதிகள் என்பவற்றிற்கு அமைய பொருட் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | iv. செயற்திட்டத்திற்கான 04 பிரதான மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்கையில் சந்தை விலையிலும் கூடிய பெருமளவு விலை ஏற்பட்டதால் கிட்டத்தட்ட ரூபா 153.75 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கிராமிய அடிப்டை வசதிகள் அபிவிருத்தியின் கீழ் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் 11 குளங்களைப் புனரமைக்கையில் கொங்ரீட் இடுதல், மேற் பகுதியில் பண்ணை அகற்றி புதிதாக மண் இடுதல் வடிகால் அமைத்து புற்களைப் பதித்தல் என்பவற்றிற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரும் ஏனைய பொறுப்பான உத்தியோகத்தர்களும் முறையாகப் பணி ஆற்றாதால் ரூபா 6,928,609 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | கூடுதல் கொடுப்பனவை அங்கீகரித்து 156(1) ஆம் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளின் அடிப்படையில் ரூபா 2,438,195 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>மதிப்பீடு செய்கையில் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதி சரியாக இருக்கும் என கருதப்பட்டது. அதற்கைமய, 2018 ஆம் ஆண்டிற்கான பெறுமதி தவறெனெக் கருதப்படாது போனால் அதனைச் சரியான பெறுமதியாகக் கருதப்பட்டது. |
| (இ) | குளியாப்பிட்டி (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அரசாங்க காணி ஒன்றில் ஏறக்குறைய 10 ஆண்டுகளாக கருங்கற்கள் உடைக்கப்பட்டவாறிருந்தன. அதனை அத்திகதி பிரதேச செயலகம் அறிந்திருக்கவில்லை. அதனால் அரசாங்கத்திற்கு 10 ஆண்டுகளாக இறைவரியை பெறமுடியாது போனது. | i. அரசாங்கத்திற்குரிய தொகை அறவிடப்பட வேண்டும். அத்து மீறிய கல் உடைததலுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>ii. அரசாங்க காணியில் அத்து மீறிக் கல் உடைத்தல் போன்றவற்றை இனம் காண்பதற்கு தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை சக்தி மிக்கதாக்கப்பட வேண்டும். | அத்து மீறி கல் உடைப்பதை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக புவிச்சரிதவியலை சுரங்கப் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | கிராமிய அடிப்படை வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | i. அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை | கணக்காய்வு விடயங்கள் விசேடமாகக் காணப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பொலிபித்திகம அமுனுகெலே போகஹமுல் குளத்தை அமுலாக்கம் நிகழ்ச்சிதிட்டத்திற்குப் பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் குறிப்புக்கமைய 4786 டிஹெக்டர் எடை அல்லது 3382 கியூர் மண்னை தலத்திலிடும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தர் அதனை 1670 கியூப் காட்டிமையால் ஒரு கியூப் 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு ரூபா 1,027,200 இழப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வாறே ஏலத்தில் கலந்து கொண்ட ஏனைய உத்தியோகத்தர்கள் இந் நடவடிக்கைகளில் விலகியிருப்பதற்கு சந்தர்ப்பம் இருந்த போதிலும் அது கருத்திற் கொள்ளப்படாது போனது. | உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டும்.<br>ii. தாபன விதிக் கோவையின் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படும். கூடுதலாக வழங்கப்பட்ட தொகையை அறவிடுமாறும் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொல்பித்திகம பாலுபலகொல்ல குள புனரமைப்பின்போது, தொழில்நுட்ப உத்தியோகத்தரால் 2018 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அளவைப் பத்திரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுக்குப் புறம்பாக 2019 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட அளவைப் பத்திரம், குளச் சுத்திகரிப்பு, மேற்பகுதியில் 220 கனமீட்டர் மண்ணை அகற்றுதல், 12 கன மீட்டர் குறுகிய வடிகாலை அமைத்தல், வெட்டிய மண்ணில் 96 கனமீட்டரை டிறக்டர் மூலம் மேற்புறத்தில் இடுதல், 1170 கனமீட்டர் சேறு அகற்றப்படுதல், பெயர்ப்பங்கை அமைப்பது என்பவற்றிற்கு ரூபா 1,301,682 வழங்கப்பட்டிருந்தது. எனினும் சேவைகளை மேற்பார்வை செய்த பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் குறிப்புக்கமைய உள்ளவாறு | மேலதிகக் கொடுப்பனவுகள் தொடர்பாக பரிசீலித்து 156(1) ஆம் நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூடுதலாக வழங்கப்பட்ட ரூபா 1,268,682 ஐ 2021 மார்ச் 31 க்கு முன்னர் அறவிடுமாறும் கவனமில்லாது நடந்து கொண்ட தொழில்நுட்ப உத்தியோத்தரை எச்சரிக்குமாறு பொல்பித்திகம பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | நடைபெற்ற சேவைகள் குளத்தின் தார்ச் சுத்திகரிப்பு மதிற் சுவரில் விரிப்பிடுதல், பெயர்ப்பலகை இடுதல் என மொத்தம் ரூபா 33,000 க்கான வேலைத்தளம் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் குறிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் ரூபா 1,268,682 சான்றுறுதி வழங்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஊ) | கிராமிய அடிப்படை வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குளங்களை புனரமைக்கும் போது தவறான கூறுவிலைகள் பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. விலைப்பட்டியலுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். சந்தர்ப்பத்தில் இவ் விலைகள் வழுவுடன் கூடியவை என தொழில்நுட்ப உத்தியோகத்தர் இனங்கண்டிருந்த போதும் அதனைத் திருத்த முயலாது 5 குளங்களுக்கு ரூபசா 5,198,933 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | தொழில்நுட்ப உத்தியோத்தரது கவனமின்மை தொடர்பாக எச்சரிக்குமாறு பொல்பிக்கிம பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (எ) | பம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொப்பித்திகம பிரதேச செயலகப் பிரிவின் 2 குளங்கள் புனரமைக்கப்படுகையில் சரியான ரேட் பயன்படுத்தப்படாது ரூபா 1,325,869 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி- | மதிப்பீடு செய்கையில் ரேட் புத்தகத்தில் உள்ள விலை சரி எனக் கருதப்பட்டிருந்தது. 2019 ரேட் தவறானது என கருதப்படவில்லை. |
| (ஏ) | பிரிகம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாறாது பிரதேச செயலகம் பெற்ற திகதியில் நான்கு வீதி நிர்மான வேலைகள் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் நிறைவேற்றிருந்தது. இச் செயற்திட்டங்களில் ரூபா 2 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய நாகொல்லாகம தோட்டத்திற்குச் செல்லும் வீதி | i. உள்ளவாறான விலைக்கு ஏற்ப உள்ளவாறான வேலைக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.<br>ii. சமுதாய அடிப்படையிலான நிறுவகத் திட்டம் | இதற்குரிய வசதி மாகாண அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்படவில்லை. |

அபிவிருத்திச் செயற்திட்டம் பரீசிலிக்கப்பட்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2012 சனவரி 05 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையைப் புறக்கணித்து அதிகாரத்துக்கு காட்டப்படாத பிரதேசத்தில் இல்லாததும் ஏனைய வசதிகள் இல்லாததுமான விவசாய அமைப்பிடம் -- ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ii. அவ்வாறே, அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைப் புறக்கணித்து செயற்திட்டத்தின் 05 சதவீத கிரயத்தை தரகாக மதிப்பீடு செய்து இருந்ததுடன் மேற்பார்வை, செய்து அளவைப் பத்திரத்தைத் தயாரித்த தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

iii. கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியலின் பிரகாரம் செயற்திட்டத்திற்கு தேவையான மண், சிறுகற்கள், ABC போன்ற மூலப் பொருட்கள் என்பவற்றினது போக்குவரத்துச் செலவினம் தவறுடன் கூடியதாக இருந்தமையால் ரூபா 298,893 கூடுதலாக கோரப்பட்டிருந்தது.

வேலையை வழங்கும் போது 01/2012 ஆம் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

iii. செயற்திட்ட மதிப்பீடு சரிவரத் தயாரிக்கப்பட வேண்டும்.

iv. இது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு சக்திமிக்கதாக்கப் பட வேண்டும்.

### 2.4 முற்பணத்தை வழங்குதலும் தீர்வு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச செயலகங்களின் 5 உத்தியோகத்தர்களின் ரூபா 538,519 மீதி 2020 டிசெம்பர் 31 அன்றும் தீர்வு செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 410,436 – உத்தியோகத்தரின் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதியாகும். அதில் ரூபா 302,994 மீதியானது 10 ஆண்டுகளைக் கடந்தனவாகும். | சேவையிலிருந்து நீங்கிய 5 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 538,519 ஆகும். அதில் 3 உத்தியோகத்தர்களது கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். அக் கடனை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிடப்படாதிருக்கும் கடன் மீதியை அறவிடுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் வினைத்திறன் மிக்கதாக இருக்க வேண்டும். |

### 2.5 வைப்பு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்டச் செயலகத்திலும் உடுபத்தாவ, நாரம்பல, லொப்பித்திகம, ரல்நாயகபுர ஆகிய பிரதேச செயலகங்களிலும் 6000-0-0-16-0-42 கணக்கு இலக்கத்தின் கீழ் ஒப்பந்தங்கள் தொடர்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 3,682,069 2-5 ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கிலிருந்து. 571(3) ஆம் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மாவட்டச் செயலகத்திலும் சில பிரதேச செயலகங்களிலும் 2-5 ஆண்டுகளாக இருந்து வரும் நிறுத்தி வைத்த தொகையில் உள்ள குறைப்பாடுகள் நிவர்த்தி செய்து துரிதமாகத் தீர்வு மேற்கொள்ளப்படும். | காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக 571 ஆம் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த நிறைவேற்று மட்டத்தை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாரியபொல பிரதேச செயலகத்தில் பிரிகம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 4,000,000 இரு வீதிகள் | வாரியபொல பிரதேச செயலாளரால் வாரியபொல பிரதேச | i. செயற்திட்டத்திற்கு பொறுப்பான |

தாரிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட போது ABC பூச்சு இடப்படாது டிப்பர் இயந்திரத்தின் மூலம் 2 வீதிகளிலும் 128 இடங்களில் 245 கன மீட்டர் பூச்சு இடப்படதாக கணக்காய்வில் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இந்த இரு வீதிகளில் ஒன்றில் ABE பரவுதல் மாத்திரமே நடைபெற்றிருந்தது. ABC ஆனது 225 மி.மீ கன பரிமானத்தில் பரப்பட வேண்டிய போதிலும், 05 இடங்களில் நேரடியாகப் பரிசீலிக்கப்பட்ட போது ஏறக்குறைய ABC 150 மி.மீ பரிமானத்தில் இருப்பது அவதானிக்கப்பட்டது. இரண்டாவது வீதியில் ABC இடப்பட்டு இருந்த போதிலும், 06 இடங்களில் 150 மி.மீட்டருக்குப் பதிலாக 120 மி.மீட்டர் -- காணப்பட்டது.

சபை உதவிச் செயலாளருக்கு 2021 பெப்ரவரி 02 ந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. பதில் கிடைக்கப்பெறவில்லை பதிலைப் பெற்றதும் அது வழங்கப்படும்.

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரது கடமை சரிவர, வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை சக்தி மிக்கதாக்க வேண்டும்.

ii. மதிப்பீட்டின் பிரகாரம் தரத்துடன் செயற்திட்டம் நடைபெற வேண்டும்.

iii. அளவைகள் சரிவர மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 3.2 எதிர்பார்த்த நலநன (OUT COME) ப் பெறாமை

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| குளியாப்பிட்டிய (மேற்கு) பிரதேச செயலகத்திற்குரிய வடுகெதர நீர்ச் செயற்திட்டத்தின் மூலம் விவசாயக் கிணறு ஒன்றும் நீர்த்தாங்கி ஒன்றும் ரூபா 10,000,000 செலவில் செய்யபடாதிருந்து அது நிறைவேற்றப்பட்டிருந்தும் அவை பயன்படுத்தப்படாதிருந்தன. | தற்சமயம் இக் கிணறு நீரைப் பயன்படத்துவதற்கான விதி முறைகள் இல்லாதிருந்தும் கிணறு பாழடைந்துள்ளது. எனினும், குடி நீர் வழங்குவதற்கு நிர்மாணிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு இணைவாக நீர்ச் செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகின்றது. | சாத்தியக் கூறு ஆய்வின் மூலம் செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடப்படுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராமிய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொல்பித்திகம மில்லகொட கந்துறு எல பாலத்தினூடாக அணை ஒன்றை அமைப்பதற்கு ரூபா 1,975,515 நிதியேற்பாடு செய்யப்பட்ட போதும், செயற்திட்டம் அமுலாக்கப்படாது கைவிடப்பட்டிருந்தது. | கடும் மழை காரணமாக செயற்திட்டத்தை அமுலாக்க முடியவில்லை. | காலதாமதமின்றி செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட வேண்டும் |
| (ஆ) | குருநாகலை பிரதேச கிராமிய குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 1,500,000 பெறுமதியான 02 செயற்திட்டங்கள் அமுலாகவில்லை. | கிராமிய பரிந்துரைக்கப்பட்ட 02 செயற்திட்டங்களாகவும் நிறைவேற்ற முடியாது போனதாக மாநகர ஆணையாளர் அறிவித்தள்ளார். | - மேற்படி- |

### 3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| குருநாகலை பிரதேச செயலகப் பிரிவில் அரசாங்கம் 2,473 காணித் துண்டுகளை சுவீகரித்து 2 முதல் 18 ஆண்டுகால தாமதம் ஏற்பட்டிருந்தது. | அரசாங்கம் காணியை சுவீகரிக்கும் போது அநேக நிறுவனங்கள் அதில் சம்பந்தப்படுவதால் ஒட்டு மொத்தமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. | காணியில் அங்கீகரிப்பின் போது முறையான நடவடிக்கை மேற்கொண்டு இயன்றளவு துரிதமாக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவத்தகம பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் 2020 செப்டெம்பர் 18 ஆந் திகதி அவரிடம் | இது பரீசீலிக்கப்படவுள்ளது | i. உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் போது சரியாகவும் முறையாகவும் பொருட்களை ஒப்படைப்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்பட்டிருந்த S/NO-SW-5-012-147X இலக்க கணனி திரும்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை சக்திமிக்கதாக அமைய வேண்டும்.<br>ii. இன்லென்டரில்ப் பொருட்களை திருப்பி பெறாது உத்தியோகத்தர் ஓய்வு பெற இடமளிக்கப்பட்டமை தொடர்பாக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நெடுங்காலமாக பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ மனையில் தங்கி இராமையால் மாலத்தகம பிரதேச செயலக உத்தியோக பூர்வமன பழுதடைந்திருந்தது. | உத்தியோகபூர்வ மனையானது பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்றவாறு இருந்தால் பழுதபார்ப்பதற்கும் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. | குடியிருப்பதற்கு ஏற்றவாறு உத்தியோகபூர்வ மனை பொருத்தமான அமைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாவத்தகம பிரதேச செயலகத்தில் 24 வகைப்பொருட்களுக்குரிய ஏறத்தாழ 74 உருப்படிகள் பரீசீலனைக்கு உட்படாதிருந்தன. 01 ஆம் இலக்க பழைய களஞ்சியம் உத்தியோகபூர்வ மனையின் கராஜ் மனையின் பின்பகுதி என்பன ஏறக்குறை 15 ஆண்டுகளாகப் பயனற்றிருந்தன. | பயன்படுத்தக்கூடிய பொருட்கள் உத்தியோகத்தர்களுக்கு வழக்கமான பயன்படுத்தப்பட முடியாதவற்றை 2020 பொருட் கணிப்பின் மூலம் ஏல விற்பனையிடத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பயனற்றிருக்கம் பொருட்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாவத்தகம பிரதேச செயலகப்பிரிவில் உதானகம பகல், இரவு – விளையாட்டு மைதானம், உதானகம் முன்பள்ளிக் கட்டிடம் உதானகம சனசமூக நிலையம் அலுவலகத்துடன் இணைந்த ஏறக்குறைய 26 அடி நீளமும் 14 அடி அகலமுமான கட்டிடமும் பயனற்று இருந்தன. | இது தொடர்பாகத் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கை பெறப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் | பயனற்றிருக்கும் கட்டிடம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 இழப்புக்களும் நட்டங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொங்கறீட் இட்டு வீதியை புனரமைக்கும் வேலைக்கு (RSI-017) வீதிகளுக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதம் தவறாக அமைந்ததால் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூக அடிப்படையிலான நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட 100 செயற்திட்டங்களில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 5,508,631 ஆகும். | வடமேல் மாகாண செயலாளரால் பதில் வழங்கப்படாமையால் இதற்கான பதிலை இச்சந்தர்ப்பத்தில் வழங்க முடியாதுள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பை அறவிட வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்விடய அபிவிருத்தி பணி உதவியாளர் பதவிக்கு குருநாகலை பிரதேச செயலகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 73 விண்ணப்பதாரர்களில் பெற வேண்டிய புள்ளிகளுக்கும் குறைவான மட்டத்திலான புள்ளிகளைப் பெற்றிருந்த 49 விண்ணப்பதாரர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | சனாதிபதி செயலகச் சுற்றறிக்கைப் பிரகாரம் குறித்த விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தால் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகையில் 18-45 வயதெல்லை இருத்தல் வேண்டும் என போதியளவு அறிவுறுத்தப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பின் போது சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) குருநாகலை பிரதேச செயலகத்தில் பல்விடய அபிவிருத்திப் பணி உதவியாளர் பதவிக்குத் தகுதி உடையோரைத் தெரிவு செய்கையில் 2020 சனவரி 20 ஆந் திகதிய | புதினப் பத்திரிகை விடயப்பரப்பும் சுற்றறிக்கையும் சனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டன ஆகும். சுற்றறிக்கைப் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு ஏற்ப தேவையான | தகுதி உடையோரை ஆட்சேர்ப்பதில் சிக்கல் ஏற்படாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புதினப் பத்திரிகை விளம்பர் புறக்கணிக்கப்பட்டு 40 வயதுக்கு மேற்பட்ட 10 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. | |
| (இ) | மாவத்தகம பிரதேச செயலகத்தின் கைவிரல் அடையாள இயந்திரத்தில் நிலவிய குறைபாடுகள் ஓராண்டுக்கு மேலாகத் திருத்தம் செய்யப்படாதிருந்தது. | புதிய கைவிரல் அடையாள இயந்திரக் கொள்வனவு நடைபெறவுள்ளது. | கைவிரல் அடையாள இயந்திரம் குறைபாடு உடையதாகக் காணப்படுமிடத்து --- அதன் பொருட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பிரதேச செயலகங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் நிதியைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் இயன்ற வரை பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தரது மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டுமாயினும், --- அபிவிருத்தி திட்டத்தின் கீழான மாவத்தகம பிரதேச சபையின் 194 செயற்திட்டங்களில் 02 மாத்திரமே தொழில்நுட்ப உத்தியோகத்தரது மேற்பார்வையின் கீழ் நடைபெற்றிருந்தது.. இதன் காரணமாக பிரதேச செயலகத்தின் 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களதும் பங்களிப்பு பெறப்படாது போனதுடன் திட்டமிட்டவாறு வேலைத்திட்டம் குறித்த காலத்துக்குள் நிறைவேறாது இருந்தது. | தொழில்நுட்ப உத்தியோகத்தரது உயரளவு பயன்பாட்டைப் பெறுமாறு மாவத்தகம பிரதேச செயலாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். | வேலைத் திட்டங்கள் திட்டமிடப்பட்டு தெரிவு செய்யப்பட வேண்டும். அவை அமுலாகும் போது முறையான நடவடிக்கைகள் காணப்படுமிடத்து இயன்ற வரை அபிவிருத்திச் செயற்திட்டங்களை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது கண்காணிப்பில் மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | குருநாகல்ம பிரதேச செயலகப் பிரிவில் கிராம | சுய தொழில்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை | கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | சக்தி முதலாம் கட்டத்தின் கீழ் சீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தின் பொருட்டு 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு ரூபா 3,579,825 வழங்கப்பட்டு அதில் ரூபா 825,000 கடனாக 59 நலன் பெறுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 2,754,825 வேறெதற்கும் பயன்படுத்தப்படவில்லை. | நாட்டில் நிலவாததால் கடனைப் பெறுவதற்கு நலன்பெறுநர்கள் இணங்கவில்லை. ஏனைய நிறுவனங்களில் கடனைப் பெற்றிருந்தமையால் 59 வழங்குனர்களுக்கு மாத்திரமே கடன் வழங்கப்பட்டது. | சீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டு முறையாக நலன் பெறுநர்களுக்கு வழங்கப்பட வேண்டும். |
| (ஊ) | குருநாகலை பிரதேச செயலகம் 2020 டிசம்பர் 31 ஆந் திகதி ஓய்வு பெற்ற 43 பேருக்கு கூடுதலாக வழங்கிய ரூபா 2,912,372 இதுவரை அறவிடப்படாதிருந்தது. | மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 2,912,372 தரவு முறைமையின் மூலம் ஓய்வூதியக்காரர்களிட மிருந்து அறவிடப்பட்டவாறுள்ளது. | கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ஓய்வூதியக்காரர் களுக்கு அறவிடப்பட வேண்டும். |
| (எ) | பொப்பித்திகம பிரதேச செயலகம் பிரிவில் கலவான குளத்தைப் புனரமைத்த உப ஒப்பந்தக்காரரது இலாபத்தை அதிகரிப்பதற்காக அதிகளவு வேறு நிறைந்திருந்த பகுதிக்கு அப்பால், வீதிக்கு அருகே வலது புறத்து மூலையில் அத்துமீறியவாறு மண்ணை அகற்றுவதற்கு பெக்கோ இயந்திரத்தின் மூலம் அகற்றுவதற்கு உத்தியோகத்தர்களின் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக, மேற்புறத்தே மீட்டருக்கு அதிக ஆழத்தில் பாதிப்படைந்திருந்தது. | எதிர்காலத்தில் சிறு நீர்ப்பாசன புனரமைப்புச் செயற்திட்டங்களின் போது வேறு அகற்றப்படும் போது அங்கு நிலவும் கன பரிமானத்தை இனங்காண்பதற்கு முறையான பரிசீலனை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குளம் புனரமைப்பின் போது குளம் பாதிக்கப்படா திருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.8 அமைச்சரவைத் தீர்மானங்களிலிருந்து விலகியிருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மே 14 ஆந் திகதிய 20/0796/212/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திலிருந்து விலகியவாறு கொவிட்டின் காரணமாக வாழ்வது கடினமாகியுள்ள வசதியற்ற குடும்பங்களுக்கு ரூபா 5,000 நலனளிக்கும் தொகையாக வழங்கப்படுகையில், சமுர்த்தி மாதாந்த உதவிப் பணமாக ரூபா 5000 பெறுபவர்களுக்கு இரண்டினதும் வித்தியாசத் தொகையே வழங்கப்பட வேண்டிடுமாயினும், சமுர்த்தி உதவிப் பணத்துடன் ரூபா 5,000 வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவில் 30 பிரிவுகளில் 173,316 சமுர்த்தி நலன் பெறுநர்களுக்கு ரூபா 424,346,960 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. | 2020 மே 14 ஆந் திகதிய 20/0796/212/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தை உள்ளடக்கிய அறிவுறுத்தல்கள் மாவட்டச் செயலாளரால் பெறப்படவில்லை. சமுர்த்த அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம் ஏப்ரல் மாதத்திற்கான சலுகைக் கடன் மே மாதத்திற்கான சமூக நலனாக வழங்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 4. நிலைபேறு அபிவிருத்தி நோக்கத்தினை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் 22 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 67.3 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட போதும், முன்னேற்றம் காணப்படவில்லை. 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய 12 நிகழ்ச்சித் திட்டங்கள் 2020 ஆம் ஆண்டில் நடைபெறவில்லை. | மாவட்டச் செயலகம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பெற்ற சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவிய கொரோனா நிலைமை காரணமாக மக்களை ஒன்று திரட்ட முடியாமை | நிலைபேறு அபிவிருத்தி நோக்கினை செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி இயன்றவரை செயல்படுத்த வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றலைக் | விசேட தேவைப்பாட்டின் பிரகாரம் 08 புதிய | - மேற்படி - |

| | |
|---|---|
| கருத்திற் கொள்ளுமிடத்து 16 நிகழ்ச்சித் திட்டங்களது செயலாற்றல் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. 2020 ஆம் ஆண்டினது நிலைபேறு அபிவிருத்தி நோக்குக் குறிப்பில் உள்ளடக்கப்படாத ரூபா 23.4 மில்லியன் பெறுமதியான 08 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட வேண்டியிருந்தன. |

**5. நல்லாளுகை**

**5.1 பொதுமக்களுக்கு சேவை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருணாகலை மாவட்டச் செயலக பிரதேச செயலகங்களில் உள்ள வெப் இணையத்தளத்தில் பொதுமக்கள் புகார்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் காணப்படவில்லை. | குறித்த வெப் இணையத்தள நடவடிக்கை உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதாகும். குறைபாடுகள் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | i. பொது மக்களது புகார்களைப் பெறக்கூடியவாறு வெவ் இணையத்தளம் அமைய வேண்டும். |
| (ஆ) | வோல்பித்திகம பிரதேச செயலகத்தில் நேரடி முறையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட குள நிர்மாணச் செயற்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு சேவைகளுடன் தொடர்புடைய பல்வேறு அழுத்தங்கள் எதுவுமின்றி உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் | செயற்திட்டத்தை நடாத்துவதற்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டதால் உப ஒப்பந்தம் பாதிக்கப்பட்டது. | i. பொதுமக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் இயன்றளவு நிதியைப் பயன்படுத்த வேண்டும்.<br>ii. 01/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் போது போதிய வேலைகள் நிறைவடையாது இருந்தன. இது சம்பந்தமாக அரசாங்க சேவைகளின் முறையற்ற தன்மையை பிரதேச வாசிகள் வெளிப்படுத்தி இருந்தனர்.

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சிங்கள் / ஆங்கில மொழி பெயர்ப்பாளர் பதவிகளில் 09 உத்தியோகத்தர்களும் சிங்கள / தமிழ் மொழிபெயர்ப்பாளர் பதவியில் 01 உத்தியோகத்தரும் மேலதிகமாக இருந்தனர். | இந்த உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாதவர்கள் ஆவர். தேவைக்கேற்ப அமைச்சினால் நியமிக்கப்படுவார்கள் ஆவர். | மேலதிக பதவியணியினர் பதவியணிக் குறைவு உள்ள இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும். |